**போட்கியார்க்கா கம்யூன்**

# அகதிகளுக்கான சுவீடிய மொழி (எஸ்.எஃப்.ஐ) பாடத்தை பயில இருக்கும் உங்களுக்காக

எஸ்.எஃப்.ஐ என்பது சுவீடிய மொழியில் உள்ள ஒரு அடிப்படையான பாடக்கல்வி ஆகும். நீங்கள் சமூகத்தில் பங்கேற்று அதில் அங்கம் வகிப்பதற்கும் மற்றும் ஒரு வேலையில் இணைந்து பணியாற்றுவதற்கும் உகந்தவாறு சிறப்பான சுவீடிய மொழி ஆளுமையை வெளிப்படுத்தும் அளவிற்கு உங்களை உருவாக்குவதே எஸ்.எஃப்.ஐ-யின் நோக்கமாகும். எஸ்.வி.ஏ (SVA)-யின் அடிப்படையில், சுவீடிய மொழியினை இரண்டாம் மொழிப்பாடமாக அடிப்படை அளவில் மேற்கொண்டு பயில செய்வதும் இதன் நோக்கமாகும். எஸ்.எஃப்.ஐ-யில் உங்களுடைய பயிற்சியின் போது, கல்வி மற்றும் தொழிற்துறைகளில் ஒரு ஆலோசகரை சந்திப்பதற்கான வாய்ப்பு உங்களுக்கு இருக்கும். இந்த ஆலோசகர் உங்களுடைய எதிர்கால வேலைவாய்ப்பிற்கு உகந்த கல்வியினை உங்களுக்கு பரிந்துரைப்பதில் உதவி புரிவார்

.

## டும்பா-வில் உள்ள எஸ்.எஃப்.ஐ பள்ளி

நீங்கள் எஸ்.எஃப்.ஐ-க்காக பதிவு செய்யும்போது, நீங்கள் **ஒரு மொழிப்பாட ஆசிரியரை** சந்திப்பீர்கள். மொழிப்பாடஆசிரியர் உங்களுடைய பின்புலம் பற்றிய சில கேள்விகளை கேட்பார் மற்றும் மொழிப்பாடத்தில் ஒரு எளிமையான தேர்வை நடத்துவார். மொழிப்பாட ஆசிரியர் உங்களுக்கு கற்பிக்கப்பட வேண்டிய கல்வி வழிமுறை மற்றும் பாடத்திட்டத்தை உங்களுக்காக மதிப்பீடு செய்வார்.

**ஸ்வீடனில் உள்ள எஸ்.எஃப்.ஐ** மூன்று கற்பிக்கும் வழிமுறைகளையும்: 1, 2 மற்றும் 3 மற்றும் நான்கு பாடத்திட்டங்களையும்: ஏ, பி சி மற்றும் டி கொண்டுள்ளது.

கற்பிக்கும் வழிமுறை 1 பாடத்திட்டம் ஏ-வுடன் துவங்குகின்றது, கற்பிக்கும் வழிமுறை 2 பாடத்திட்டம் பி-யுடன் துவங்குகின்றது மற்றும் கற்பிக்கும் வழிமுறை 3 பாடத்திட்டம் சி-யுடன் துவங்குகின்றது. ஒவ்வொரு பாடத்திட்டத்தை முடித்தவுடன் நீங்கள் ஒரு தேர்வினை எழுதி அதற்கான ஒரு தரச்சான்றிதழை பெறுவீர்கள். புதிய பாடத்திட்டத்தை பயில துவங்கும் முன் நீங்கள் அதற்கு முந்தைய பாடதிட்டத்திற்கான தரச்சான்றை பெற்றிருக்க வேண்டும். நாங்கள்

# போட்கியார்க்கா கம்யூன்

எஸ்.எ.ஃப.ஐ-யினை காலை நேரம், மாலை நேரம், சனிக்கிழமைகள் மற்றும் தொலைதூரக்கல்வி முறையிலும் வழங்குகின்றோம்.

பி மற்றும் சி எஸ்.எ.ஃப்.ஐ பாடங்கள் ஐந்து வாரத்திற்குள்ளான ஒரு **அறிமுக பாடத்துடன்** துவங்குகின்றன. இங்கு சுவீடிய மொழிக்கான ஒரு அறிமுகத்தினை பெறுவீர்கள். பள்ளியை பற்றியும் பல்வேறுவிதமான எஸ்.எ.ஃப்.ஐ பாடத்திட்டங்கள் பற்றிய தகவலையும் நீங்கள் பெறுவீர்கள். ஆசிரியருடன் இணைந்து, **பயில்வதற்கான தனிப்பட்ட திட்டத்தையும்**, நீங்கள் கற்கும் முறை எவ்வாறு இருக்கும் என்பதையும் உருவாக்குவீர்கள்.

**சி பாடங்களில்** உங்களுடைய எஸ்.எ.ஃப்.ஐ கல்வி-யினை ஒரு **தொழில்முறை பயிற்சி பாடத்துடன்** இணைப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும். டும்பா-வில் உள்ள எஸ்.எ.ஃப்.ஐ-யில் எவ்வகையான தொழில்முறை பயற்சி பாடங்கள் வழங்கப்படுகின்றன என்பதைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள விரும்பினால் நீங்கள் உங்களுடைய ஆசிரியருடன் அல்லது பள்ளியில் உள்ள வரவேற்பாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம். மூன்றாம் தளத்தில் வரவேற்பாளர் அலுவலகம் உள்ளது.

எஸ்.எ.ஃப்.ஐ-யில் பல்வேறு மதங்கள், கலாச்சாரம், பாலியல் சார்பு மற்றும் பின்னணியுள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் பங்கேற்கின்றனர். நாங்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் மதிக்கிறோம் மற்றும் கருத்துக்கு மதிப்பளிக்கின்றோம்.

**ஒரு புதிய மொழியினை கற்றறிதல்**

டும்பலாவில் உள்ள எஸ்.எ.ஃப்.ஐ-யில் நீங்கள் பெரிய மற்றும் குறுகிய குழுவுடன் பயில்வீர்கள்; பள்ளிக்கு உள்ளும் வெளிப்புறத்திலும், சிலசமயங்களில் நீங்கள் தனியாக வேலை செய்வீர்கள், சில நேரங்களில் மற்றவர்களுடன் இணைந்து வேலை செய்வீர்கள்.

எஸ்.எ.ஃப்.ஐ-யில், நாங்கள் எப்போதும் வகுப்பறையில் சுவீடிய மொழியில் உரையாடுவோம். எப்போதும் சுவீடிய மொழியில் பேச முடிந்தவரை முயற்சி செய்யுங்கள்.

எஸ்.எ.ஃப்.ஐ-யில், ஆசிரியர்கள் பல்வேறு சாதனங்களை பயன்படுத்துகின்றனர். எஸ்.எ.ஃப்.ஐ பாடங்களுக்கு பல்வேறு கற்பிக்கும் சாதனங்கள் இருக்கலாம், ஆனால் அதனுடன் செய்தித்தாள்கள், சமூக ஊடகங்கள், மொழி திட்டங்கள், வலைப்பூக்கள், ஐபாட்கள் மற்றும் கணினிகளும் இருக்கும்.

எஸ்.எ.ஃப்.ஐ-யில், நாங்கள் கூகிள் வகுப்பறையை பயன்படுத்துகின்றோம், இது ஒரு சிறந்த டிஜிட்டல் கற்றல் தளமாகும். பாடங்கள் துவங்கும்போது உங்களுக்கான உள்நுழைவு விவரங்களைப் பெறுவீர்கள்.

## உங்கள் படிப்புக்கு நீங்கள் பொறுப்பாவீர்கள்

நீங்கள் **சரியான நேரத்திற்கு வருகை புரிவதும்** மற்றும் பாடங்களின் போது தீவிரமாக பங்கேற்பதும் மிகவும் அவசியமானது ஆகும். மேலும் நீங்கள் வீட்டுப்பாடத்தை தவறாமல் செய்வதும், நீங்கள் கற்றுக்கொண்டதை மீண்டும் பயிற்சி செய்து பார்ப்பதும் அவசியம் ஆகும்.

# போட்கியார்க்கா கம்யூன்

நீங்கள் உடல்நலம் குன்றியிருந்தால் அல்லது ஒரு நாள் வகுப்பிற்கு வர இயலவில்லை என்றால், தவறவிட்ட பாடத்திற்கு **நீங்களே பொறுப்பாவீர்கள்**. உங்களால் கலந்துகொள்ள இயலாதபோது ஆசிரியரிடம் தவறாமல் தெரிவிக்கவும். எஸ்.எஃப்.இ-யில் பங்கேற்பதில் உங்களுக்கு பிரச்சனைகள் இருப்பின், நீங்கள் உங்களுடைய ஆசிரியருடன் இணைந்து உங்கள் கல்விக்கான ஒரு சிறந்த வழிமுறையினை கண்டறிய வேண்டும்.

**உங்களுக்கே உரித்தான வேகத்தில் கல்வி பயில்கிறீர்கள்**

ஒவ்வொரு ஐந்து வாரத்திற்கும் நாங்கள் புதிய மாணவர்களை எடுக்கின்றோம். எனவே, வெவ்வேறு தேதிகளில் எங்களின் மாணவர்கள் துவங்குகின்றனர் மற்றும் முடிக்கின்றனர். இலக்குகளை அடைந்த பின்னரே நீங்கள் ஒரு பாடத்திட்டத்தை முடிப்பீர்கள். வெவ்வேறு நபர்களுக்கு வெவ்வேறு கால அளவு தேவைப்படுகின்றது. ஒவ்வொரு மாணவருக்கும் பள்ளி அதிகபட்சமான நேரத்தை வழங்குகின்றது மற்றும் இந்த கால அளவானது நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள பயிலும் வழிமுறையினை பொருத்தது ஆகும். நீங்கள் நியமிக்கபட்ட நேரத்திற்குள் முடிக்க இயலாமல் போகும் ஆபத்து இருப்பதாக ஆசிரியர் கருதினால், தகுந்த இடங்களில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

பயிற்சியின் இறுதியில் நீங்கள் ஒரு தேசிய அளவிலான தேர்வினை எழுதவீர்கள், (நேஷனலேட்டே ப்ரோவ், என்.பி) மற்றும் நீங்கள் இத்தேர்வினை எப்போது எழுத வேண்டும் என்பதை உங்கள் ஆசிரியர் முடிவு செய்வார். உங்கள் பயிற்சி நிறைவடையும் போது உங்களுக்கு அப்பாடத்திற்கான ஒரு தரச்சான்று கிடைக்கும்.

**ஒரு புதிய மொழியை கற்பதற்கு அதிகப்படியான நேரம் தேவைப்படும் என்பதை நீங்கள் புரிந்திருப்பது மிகவும் அவசியம் ஆகும்.**

**நினைவில் கொள்ளவும்:**

- உங்களுடைய குழந்தையை நீங்கள் பள்ளிக்கு அழைத்து வரக்கூடாது.
- நீங்கள் எஸ்.எஃப்.ஐ-க்கு வராமல் இருந்தால், நீங்கள் வராமல் இருந்தது பதிவு செய்யப்படும். 21 நாட்களுக்கு மேலாக நீங்கள் வராமல் இருக்கக்கூடாது. நீங்கள் உடல்நிலை சரியில்லாமலோ அல்லது விடுமுறையில் சென்றிருந்தாலோ எப்போதும் பள்ளிக்கு தகவலை தெரிவிக்கவும்.
- மோசடி செய்வது எஸ்.எஃப்.ஐ-யில் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது.
- ஒவ்வாமை காரணமாக, நீங்கள் பள்ளியில் அதிகப்படியான வாசனை திரவயத்தை பள்ளியில் உள்ளபோது பயன்படுத்தக்கூடாது.
- பள்ளிக்கு வெளியில் குறிக்கப்பட்டுள்ள பகுதியில் மட்டுமே நீங்கள் புகைக்கலாம்.
- தீ எச்சரிக்கை விடப்பட்டு இருந்தால், நீங்கள் உடனடியாக அவசர வெளியேறும் வழியின் அருகாமைக்கு செல்ல வேண்டும் மற்றும் உங்களுடைய அனைத்து உடமைகளையும் உடனடியாக விட்டுவிட்டு எஸ்.எப்.ஐ-க்கு வெளியே உள்ள நீண்ட கார் நிறுத்தும் இடத்திக்கு செல்லவும்.

**போட்கியர்கா நகராட்சியில் வயது வந்தோருக்கான கல்வியியை SFI -யில் தொடங்குவதற்கு வரவேற்கிறோம் (வக்செனுட்பில்ட்னிங்கம்)!**